மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 341/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சேகர் (எ) ஆறுமுகம் | நாள் | 23.09.2023 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

48) பிரதிவாதிகள் என் மீது அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையர் நிலத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். அதற்கு பின்னிட்டு இரண்டு வருடங்கள் கழித்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். இவ்வழக்கில் நான் மேற்படி அ.வ.எண்.194/2013 என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை ரத்து செய்து புதிய நீதிமன்ற ஆணையர் நியமிக்க வேண்டும் என கூறியுள்ளேனா என்றால், ஆமாம்.

49) நான் சொல்வது பொய்யானது என்றாலும், மேற்படி அ.வ.எண்.194/2013 என்ற வழக்கின் வழக்கு சங்கதிகளை முழுவதுமாக மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல. இவ்வழக்கை அவ்வாறு தடம் உள்ளதை மறைத்தும், பிரதிவாதிகளுக்கு வேறு மாற்று தடம் உள்ளதா? என்று வழக்குரையில் தெளிவுப்படுத்தாமலும், தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் என் மீது அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை தாக்கல் செய்ததால் நான் பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான்.

50) இவ்வழக்கில் நான் என்ன சொத்து விவரம் காட்டியுள்ளேன் என்றால், ச.எண்.248/1Bல் 74 சென்ட் நிலமும், ச.எண்.248/1A3ல் 53–1/4 சென்ட் நிலமும், ச.எண்.248/2ல் தடமும் சேர்த்து மேற்படி வழக்கில் காட்டியுள்ளேன். ச.எண்.248/2ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால், பரப்பளவு எனக்கு தெரியாது. ஆனால் 20 மீ நீளம் இருக்கும். அகலம் எனக்கு தெரியவில்லை. மேற்படி ச.எண்.248/2 நிலத்திற்கு நான்குபுற செக்குபந்தி விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

51) ச.எண்.248/1B நிலத்திற்கு செக்குபந்தி விவரங்கள் தெரியுமா என்றால், தெரியும். சின்னப்பன் நிலத்திற்கும் தெற்கு, பழனியம்மாள் நிலத்திற்கும் கிழக்கு, பெருமாள் நிலத்திற்கும் வடக்கு, மேற்கு புறம் எனக்கு பாத்தியப்பட்ட ச.எண்.248/1A3 நிலம் உள்ளது. மேற்படி செக்குபந்தி விவரத்தை தான் என் வழக்குரை சொத்து விவரத்தில் நான் காட்டியுள்ளேனா என்றால், ஆம். மேற்படி ச.எண்.248/1B நிலத்தில் என்னென்ன உள்ளது என்றால், 3 வில்லை வீடுகளும், 1 கூரை வீடும் உள்ளது. மேற்படி வீடுகளுக்குரிய அளவுகள் மற்றும் கதவு எண் பற்றி வழக்குரை சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை.

52) மேற்படி ச.எண்.248/1A3 ல் உள்ள நிலத்திற்கு என் வழக்குரையில் செக்குபந்தி விவரங்கள் குறிப்பிட்டுள்ளேனா என்றால், குறிப்பிட்டுள்ளேன். என்ன செக்குபந்தி விவரங்கள் என்றால், தற்போது எனக்கு நினைவில்லை. அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை பிரதிவாதிகள் எந்த சொத்திற்கு செல்லும் தடவழிக்காக தாக்கல் செய்துள்ளனர் என்றால், எங்கள் பூர்வீக சொத்திற்கு செல்லும் தடவழிக்காக தாக்கல் செய்துள்ளனர். பூர்வீக சொத்திற்கு ஆரம்பத்திலிருந்தே தடவழி உள்ளதா என்றால், தனியாக தடவழி எதுவும் இல்லை. நாங்கள் எங்களுக்குள் உள்ள பரஸ்பரம் உறவின் படி நாங்கள் அடுத்தவர் நிலங்களில் சென்று வந்தோம். அவ்வாறு எங்களுக்குள் உள்ள பரஸ்பர உடன்பாட்டின் படி நாங்கள் சென்று வந்த தடவழி எல்லாம் எங்களது பங்காளிகள் நிலத்திற்குள் தான் அமைந்துள்ளது என்றால், சரிதான்.

53) அவ்வாறு எங்களுக்குள்ள பரஸ்பர உடன்பாட்டின் படி யார் யார் நிலங்களின் வழியாக நாங்கள் சென்று வந்தோம் என்பது குறித்து பிரதிவாதிகள் என் மீது தாக்கல் செய்த அ.வ.எண்.194/2013 என்ற வழக்கில் பதிலுரையிலோ, அல்லது நான் தற்போது தாக்கல் செய்துள்ள இவ்வழக்கின் வழக்குரையிலோ குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரிதான்.

54) அவ்வாறு பிரதிவாதிகள் என் மீது தாக்கல் செய்த அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை முறியடிக்கும் விதமாக நான் இரண்டு ஆண்டுகள் கழித்து பிரதிவாதிகளுக்கு

எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக இவ்வழக்கில் தங்கள் பதிலுரையில் கூறியுள்ளனர் என்றால், சரிதான்.

55) இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது நான் வழக்குரை சங்கதிகளை திருத்த வேண்டி மனு தாக்கல் செய்து அதன் பேரில் வழக்குரையில் திருத்தங்கள் செய்துள்ளேன் என்றால், சரிதான். இவ்வழக்கில் பிரதிவாதிகள் மேற்படி சங்கதிகளை கூறி பதிலுரை தாக்கல் செய்த பின்னிட்டாவது அவ்வாறு பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை முறியடிக்க வேண்டி நான் இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என மறுத்து மறுப்புரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. மறுப்புரை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு நான் எவ்வித மறுப்புரையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல.

56) இவ்வழக்கிலுள்ள சொத்துக்களில் எது பூர்வீக சொத்து? எது கிரய சொத்து? என்றால், ச.எண்.248/1B ல் உள்ளது பூர்வீக சொத்து, ச.எண்.248/1A3 ல் உள்ளது கிரய சொத்து. ச.எண்.248/1A3 ல் உள்ள நிலத்திற்கு எந்த பக்கத்தில் தடவழி அமைந்துள்ளது என்றால், தெற்கு பக்கத்தில் உள்ளது. மேற்படி தடவழி எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால், ச.எண்.248/2 ல் அமைந்துள்ளது.

57) பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து எந்த சர்வே எண்ணில் வருகிறது என்றால், அனைவருக்கும் ச.எண்.248/1B ல் தான் வருகிறது. ச.எண்.248/1B ல் உள்ள எனது நிலத்தை ஒட்டி எந்த புறமாக பிரதிவாதிகளது நிலம் வருகிறது என்றால், வடக்கு புறமாக உள்ளது. மேற்படி வடக்குபுறம் உள்ள பிரதிவாதிகள் நிலத்திற்கு தடவழி எங்கு உள்ளது என்றால், அவர்களது நிலத்திற்கு வடபுறமாகவே தடவழி உள்ளது. மேற்படி தடவழியிலிருந்து கிழக்கு புறமாக சென்றால், ரோட்டை அடையலாம். அவரவர்கள் நிலத்திலிருந்து ரோட்டை அடைய வழி உள்ளது.

58) எனக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களையோ அல்லது கிரய சொத்தக்களையோ நான் அனுபவிப்பதை பிரதிவாதிகள் தடுத்தனரா என்றால், ஆமாம்.

எப்போது தடுத்தனர் என்றால், தேதி, வருடம் சரியாக நினைவில்லை. ஆனால் 2, 3 முறை தடுத்தனர். நான் சொல்வது பொய்யானது என்றாலும், அவ்வாறு பிரதிவாதிகள் ஒருபோதும் என் அனுபவத்திற்கு இடையூறு செய்ததில்லை என்றாலும், பிரதிவாதிகள் என் மீது அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளதால் நான் அவர்களை பழி வாங்கும் விதமாக 2 ஆண்டுகள் கழித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

59) சிந்தாமணியூர் செல்லும் தார் ரோடு தென்வடலாக செல்கிறது என்றால், சரிதான். மேற்படி தென்வடல் சாலைக்கு மேற்குபுறமாக ச.எண்.248/1A3 நிலம் அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி ச.எண்.248/1A3 ல் உள்ள நிலத்திற்கு தெற்குபுறமாக எனது தொகுப்பு வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி தொகுப்பு வீட்டிற்கு கிழக்குபுறமாக இரண்டு மின் கம்பங்கள் உள்ளது என்றால், சரிதான். அதில் ஒன்று தார்சாலையை ஒட்டியும், மற்றொன்று அதன் மேற்கு புறமும் அமைந்துள்ளது என்றால், சரிதான்.

60) ச.எண்.248/1A3 ல் உள்ள நிலத்தில் அமைந்துள்ள என் தொகுப்பு வீட்டிற்கு வடக்குபுறமாக பெரியண்ணன்ன என்பவரது கூரை வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். ச.எண்.248/1A1, ச.எண்.248/1A2, ச.எண்.248/1B ஆகிய நிலங்கள் ச.எண்.248/1A3 க்கு மேற்குபுறமாக அமைந்துள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1A3 ல் அமைந்துள்ள பெரியண்ணனின் கூரை வீட்டிற்கு வடக்கு புறமாக ஒரு மின் கம்பம் உள்ளது என்றால், சரிதான்.

61) ச.எண்.248/1A1, ச.எண்.248/1A2, ச.எண்.248/1B ஆகிய நிலங்களுக்கும், ச.எண்.248/1A3 ல் உள்ள நிலத்திற்கும் நடுவில் 2 அடி உயரத்தில் ஒரு கல்கட்டு உள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1A3 க்கும் மற்றும் ச.எண்.248/1B க்கும் தெற்கபுறமாக சுமார் 10 அடி அகலமுள்ள கிழமேல் மண்பாதை உள்ளது என்றால், இல்லை.

62) ச.எண்.248/2 ல் உள்ள தடம் மேற்படி ச.எண்.248/1A3 மற்றும் ச.எண்.248/1B ல்

உள்ள நிலங்களுக்கு எந்த புறமாக அமைந்துள்ளது என்றால், தெற்குபுறமாக உள்ளது. தற்போது நான் ச.எண்.248/1A3க்கும், ச.எண்.248/1Bக்கும் தெற்குபுறமாக 10 அடி அகலத்தில் கிழமேலாக மண்பாதை இல்லை என சொல்வது தவறானது என்றாலும், மேற்படி மண்பாதை இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல்செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், உண்மையை மறைக்க தற்போது அவ்வாறு மண்பாதை இல்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

63) மேற்படி ச.எண்.248/1A3, ச.எண்.248/1B ஆகியவற்றிலுள்ள நிலங்களுக்கு இடையில் தென்வடலாக 4 அடி அகல மண்பாதை ஒன்று ச.எண்.248/2ல் இருந்து செல்கிறது என்றால், அவ்வாறு எந்த மண்பாதையும் இல்லை. மேற்படி 4 அடி அகல மண்பாதையை நான் தடுப்பதாக கூறிதான் பிரதிவாதிகள் என் மீது அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால், ஆமாம்.

64) ச.எண்.248/1Bல் எனது கூரை வீடு தெற்குபுறமாக உள்ளது என்றால், சரிதான். மேற்படி வீட்டிற்கு வடகிழக்கில் சுப்ரமணியனின் வில்லை வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி சுப்ரமணியன் வீட்டிற்கு கிழக்கிலும், 4 அடி அகல மண்பாதைக்கும் மேற்கிலும் மின்கம்பம் ஒன்று உள்ளது என்றால், சரிதான். மின்கம்பம் உள்ளது உண்மைதான். ஆனால் அங்கு 4 அடி அகலத்தில் மண்பாதை எதுவும் கிடையாது.

65) மேற்படி மின்கம்பத்திற்கு வடக்குபுறமாக பீய மரம் ஒன்று உள்ளது என்றால், சரிதான். மேற்படி பீய மரத்திற்கு வடக்கு புறம் ஒரு புளிய மரம் உள்ளது என்றால், இல்லை. மேற்படி மரம் எப்போது வெட்டப்பட்டது என்றால், ஆரம்பத்தில் இருந்தே அவ்வாறு மரம் எதுவும் இல்லை.

66) நான் சொல்வது பொய்யானது என்றாலும், அ.வ.எண்.194/2013 என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கையில் அங்கு புளிய மரம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றாலும், தற்போது வழக்கிற்காக அங்கு புளிய மரம் எதுவும் இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

67) ச.எண்.248/1B க்கு வடக்குபுறமாக பெரியண்ணனின் வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி வீட்டிற்கு மேற்கு புறமாக பெரியண்ணனுக்கு மற்றொரு வில்லை வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி பீய மரத்திலிருந்து பெரியண்ணனின் வில்லை வீடு அமைந்துள்ள பகுதிக்கு கிழக்கு புறமாக உள்ள 4 அடி தடத்தில் முள், கற்கள் போன்றவற்றை போட்டு வழித்தடத்தை தடுத்து நான் இடையூறு செய்ததால் தான் மேற்படி வழக்கை பிரதிவாதிகள் என் மீது தாக்கல் செய்தனர் என்றால், சரியல்ல.

68) ச.எண்.248/1B க்கு வடக்கு புறமாக ச.எண்.248/1A2 உள்ளது என்றால், சரிதான். மேற்படி ச.எண்.248/1A2 ல் தெற்கு புறமாகவும், ச.எண்.248/1B க்கு வடக்கு புறமாக கந்தசாமியின் கூரை வீடு அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி ச.எண்.248/1A2 ல் கிழக்கு புற ஓரமாக மூங்கில் மரங்கள் உள்ளது என்றால், சரிதான். மேற்படி மூங்கில் மரங்களுக்கு கிழபுறமாக தான் மேற்படி 4 அடி அகல மண்பாதை செல்கிறது என்றால், சரியல்ல.

69) மேற்படி ச.எண்.248/1A2 க்கு வடக்கு புறமாக ச.எண்.248/1A1 அமைந்துள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1A1 க்கு தென்புறமும், ச.எண்.248/1A2 ன் வடபுறமும் கொளந்தை பையன் என்பவருடைய தொகுப்பு வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி தொகுப்பு வீட்டிற்கு கிழக்கு புறம் மின்கம்பம் உள்ளது என்றால், சரிதான். மேற்படி கொளந்தை பையனின் வீட்டிற்கு வடக்குபுறமாக ஆறுமுகம் என்பவரது தொகுப்பு வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி ஆறுமுகத்தின் தொகுப்பு வீட்டிற்கு மேற்கு புறமாக அவரது வில்லை வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி ஆறுமுகத்தின் தொகுப்பு வீட்டிற்கு வடக்கு புறமாக பழனி என்பவரது கூரை வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி பழனியின் கூரை வீட்டிற்கு மேற்கு புறமாக அவரது அட்டை வேய்ந்த வீடு உள்ளது என்றால், சரிதான்.

70) மேற்படி கொளந்தை பையனின் வீட்டிற்கு கிழபுறமாக உள்ள மின்கம்பத்தை ஒட்டி கிழபுறமாக 4 அடி அகலத்தில் தென்வடல் மண்பாதை செல்கிறது என்றால், அவ்வாறு மண்பாதை எதுவும் செல்லவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் மேற்படி 4 அடி அகல மண்பாதையை பற்றியோ, இதர புல

எண்களை பற்றியோ, பௌதீக அமைப்புகள் பற்றியோ என் குறுக்கு விசாரணையில் தற்போது நான் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை பற்றியோ குறிப்பிடாமல் உள்ளது என்றாலும், உண்மையான நில அமைப்பை தெளிவு படுத்தி காட்டாததால் மேற்படி ஆணையரின் அறிக்கையும், வரைபடமும் சட்டப்படி ஏற்கதக்கதல்ல என்றால், சரியல்ல.

71) இவ்வழக்கை நான் தாக்கல் செய்த பின்னிட்டு பெரியண்ணன் மற்றும் பொன்னம்மாள் ஆகியோர் இறந்துவிட்டனர் என்றால், சரிதான். பொன்னம்மாள் என்பவர் என் தாயார். என் தாயார் பொன்னம்மாளின் சட்டப்படியான வாரிசுகளாக 4 முதல் 17 வரையிலான வாதிகளை இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ள நிலையில் என் தாயாரை பொறுத்தே நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர எவ்வித முகாந்திரமும் எழாத நிலையில் மேற்படி 4 முதல் 17 வரையிலான வாதிகளை இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ளதால், தேவையற்ற தரப்பினரை சேர்த்துள்ள காரணத்தினால் என் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல.

72) அ.வ.எண்.194/2013 என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை, வரைபடம் மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றிற்கு எங்கள் தரப்பில் நாளது தேதி வரை ஏதேனும் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளோமா என்றால், இல்லை. மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவில் இந்நீதிமன்றத்தால் Status quo உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி உத்தரவை எதிர்த்து நாளது தேதி வரை நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் எனக்கு தெரியாது என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், மேற்படி உத்தரவை நாளது தேதி வரை நான் பின்பற்றாமல் உள்ளேன் என்றாலும், சரியல்ல.

73) ச.எண்.248/2 மற்றும் ச.எண்.248/1B ஆகியவற்றிலுள்ள பாதையை தடுப்பதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், மேற்படி பாதைகளை மறைத்தும், எனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.194/2013 என்ற வழக்கின் நடவடிக்கைகளை முழுவதும் மறைத்தும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளதால், நான் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை என்பதால்,

என் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றாலும், சரியல்ல.

74) பிரதிவாதிகள், அவர்களுக்கும், எங்களுக்கும் ஆக இருவருக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட தடத்தில் தான் உரிமை கோருகிறார்கள் என்றாலும், மேற்படி 4 அடி அகல தென்வடல் மண்பாதையை தவிர பிரதிவாதிகளின் பூர்வீக மற்றும் கிரய சொத்துக்களுக்கு செல்வதற்கு மாற்று வழித்தடம் எதுவும் இல்லை என்பதாலும், உண்மைகளை மறைத்து நான் என் வழக்கை தாக்கல் செய்துள்ளதால், என் வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.